தீக்கதிர்
THEEKKATHIR TAMIL DAILY

மதுரை/திண்டுக்கல்/தேனி 20.06.2025

தீக்கதிர்
மதுரை # 20-06-2025

### மத நல்லிணக்க மரபை பாதுகாப்போம்!

# மதுரையில் மனிதச் சங்கிலி இயக்கம்








மதுரை, ஜூன் 19-

மதுரையின் மத நல்லிணக்க மரபை பாதுகாக்க வலியுறுத்தி மதுரை மதநல்லிணக்க மக்கள் கூட்டமைப்பு சார்பில் மனிதச் சங்கிலி உலகத் தமிழ்ச்சங்கம் முன்பு புதனன்று நடைபெற்றது. இதற்கு ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் வாஞ்சிநாதன் தலைமை வகித்தார். இதில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், திரைப்பட இயக்குநர் அமீர், மக்கள் கண்காணிப்பக இயக்குநர் ஹென்றி டிபேன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதில் மார்க்சிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் மா.கணேசன், மாநிலக்குழு உறுப்பினர் இரா. விஜயராஜன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் வை.ஸ்டாலின், மாமன்ற உறுப்பினர் டி.குமரவேல், தமிழ்நாடு சிறுபான்மை மக்கள் நலக்குழு மாவட்டச் செயலாளர் என்.கணேசமூர்த்தி, மாநிலக்குழு உறுப்பினர் பெனடிக்ட்பர்னபாஸ், மாவட்ட துணைத் தலைவர் முகம்மது அலி, தமிழ்ப்புலிகள் கட்சி, ஆதித்தமிழர் பேரவை மற்றும் பல்வேறு அமைப்பினர் கலந்து கொண்டனர்.

இதில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் பங்கேற்று முழக்கங்கள் எழுப்பினார். பின்னர் அவர் பேசியதாவது:

பாஜக மற்றும் சங் பரிவார் அமைப்புகள் வடமாநிலங்களில் கடவுள் ராமர் பெயரில் கலவரங்களை ஏற்படுத்தி மக்களை பிளவுபடுத்தி அரசியல் ஆதாயம் தேடியதுபோல், தமிழகத்தில் கடவுள் முருகன் பெயரில் கலவரங்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். தமிழகம் மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக திகழும் மண், எல்லா கட்சியிலும் முருகனை வழிபடுவோர் உள்ளனர். இங்கு மதங்களின் பெயரால் கடவுளின் பெயரால் மக்களை பிளவு படுத்த முடியாது. இதன் மூலம் 2026 சட்டப்பேரவை தேர்தலில் அரசியல் ஆதாயம் தேட திட்டமிடுகின்றனர். அந்த தொலைநோக்கு திட்டத்தின் அடிப்படையில் முருக பக்தர்கள் மாநாடு நடத்துகின்றனர். பாஜகவின் சூழ்ச்சியில் முருக பக்தர்கள் ஏமாந்து விடக்கூடாது. மதநல்லிணக்க மதுரையில் முருக பக்தரகள் மாநாடு நடத்துவதன் நோக்கமே பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது வட மாநிலங்களில் கலவரம் வெடித்தது. அப்போது தமிழகம் மத நல்லிணக்கத்தால் அமைதி நிலவியது.

அத்தகைய தமிழகத்தில் குறிப்பாக மதுரை மத நல்லிணக்கத்திற்கு பெயர் போன மண். சங்பரிவார் அமைப்புகள் மதுரையை தேர்வு செய்ததற்கு முக்குலத்தோர் வாக்குகளை பெறுவதற்குத்தான். தேர்தல் அரசியலில் பாஜகவுக்கு ஆதரவாக இந்து உணர்வுள்ளவர்களை எல்லாம் ஒன்று திரட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் மதுரையில் முருக பக்தர்கள் மாநாடு நடத்தப்படுகிறது. தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமாரியில் நாடார் சமூகத்தினரை வளைத்துப் போட்டுவிட்டோம். மதுரையை மையமாக வைத்து முக்குலத்தோர் சமுதாயத்தினரை வளைத்துப்போட வேண்டும் என்பதுதான் அவர்களது நோக்கம். அதற்கு யாரும் இரையாக மாட்டார்கள் என்பதை சொல்வதற்குத்தான் இந்த மனிதச் சங்கிலி போராட்டம். சாதி அடிப்படையில் வேறுபாடுகள் முரண்பாடுகள் இருக்கலாம். மதத்தின் பெயரால் தமிழர்களை பிளவுபடுத்தும் முயற்சியை சங்பரிவார் அமைப்புகள் கைவிட வேண்டும். இல்லையேல் அவர்களது வால் ஒட்ட நறுக்கப்பட வேண்டும். இந்த மண்ணில் வன்முறை ஏற்படக் கூடாது என்ற பொறுப்புணர்வுடன் பேசுகிறோம். உங்களின் சூழ்ச்சியை தமிழக மக்கள் புரிந்து வைத்துள்ளனர். மதத்தின் பெயரால் தமிழக மக்களை பிளவு படுத்த முடியாது.

இவ்வாறு அவர் பேசினார்.